# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 29.05.19 | | **அரியலூர் நகராட்சியின் அவசரக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 29.05.2019 தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அதுதொடர்பாக கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.** | |
| 29.05.19 | 34 | **<u>பொருள் எண். 01</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் இதர இடங்களில் உள்ள மாதாந்திர வாடகை இன கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.10342/2009/ஆர்3, நாள்.17.03.2009ன் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட அரசுக்கடிதம் எண்.6655/நநி4/(2)/09–1, நாள்.12.03.2009, நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடலாம். மூன்று ஆண்டுகளைக்கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன்னிச்சையாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத்தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும். இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்குப் பொருந்தும். ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர், குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்படவேண்டும்.<br>தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக்கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லையானால் அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி கீழ்க்குறிப்பிட்டுள்ள இந்நகராட்சி கடைகள் குத்தகைதாரர்களுக்கு 01.04.2018 முதல் மாத குத்தகை வாடகை தொகைகள் தற்போதைய அங்காடி மதிப்பின்படி மாத குத்தகை வாடகையினை நிர்ணயம் செய்ய தஞ்சாவூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவினால் மறுமதிப்பீடு செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ள வாடகை விபர பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. கண்காணிப்பு குழுவினால் மறுமதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை குத்தகை தொகையினை 01.04.2018 முதல் 9 ஆண்டுகள் தொகுப்பு கால அளவு வரை மேற்படி அரசாணையின் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி வசூல் செய்யலாம்.<br>2. மறுமதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை தொகையினை 01.04.2018 முதல் செலுத்த ஒப்புக்கொள்ளாத குத்தகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடலாம். | |
| 29.05.2019 | 35 | **<u>பொருள் எண். 02</u>**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருவதால், அந்த இடத்தில் இயங்கி வரும் கடை குத்தகைதாரர்கள் நீதிமன்றம் செல்லாதவாறு முன்கேவியட் மனு எண்.37/2019 சப் கோர்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கான வழக்காடுத்தொகையாக நகராட்சி குத்தைககதாரர் ஒருவருக்கு ரூ.3000/— வீதம் 10 குத்தகைதாரர்களுக்கு ரூ.30,000/— மற்றும் முன்கேவியட் மனு எண்.27/2019 முன்சீப் கோர்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கான வழக்காடுத்தொகையாக நகராட்சி குத்தைககதாரர் ஒருவருக்கு ரூ.3000/— வீதம் 10 குத்தகைதாரர்களுக்கு ரூ.30,000/— என மொத்தம் வழக்காடு தொகை ரூ.60,000/— அரசு வழக்கறிஞர் கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>புதிய அலுவலக கட்டும் பணி குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டியதனை கருத்தில் கொண்டு, அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகையினை வழங்கியதை அங்கீகரிக்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 29.05.2019 | 36 | **<u>பொருள் எண். 03</u>**<br><br>இந்நகராட்சி பொது சுகாதார வாகனமான டம்பர் பிளேசர் (TN 61A 0749) தகுதி சான்று பெறுவதற்காக பழுது பராமரிப்பு மற்றும் உதிரி பாகங்கள் வாங்கி மற்றும் தகுதி சான்று கட்டணங்கள் ஆகிய பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/— மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**25.09.2019** | **37**

**<u>பொருள் எண். 04</u>**

பொது சுகாதார டம்பர் பிளேசர் வாகனம் (TN 61A 0749) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு, உதிரி பாகங்களை புதியதாக மாற்றி தருதல் பணிகள் மேற்கொள்ள அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | அங்காளம்மன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அரியலூர் | நாகராஜன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அரியலூர் | பாலாஜி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அரியலூர் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார டம்பர் பிளேசர் வாகனம் (TN 61A 0749) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு, உதிரி பாகங்களை புதியதாக மாற்றி தருதல் | ரூ.2,12,100/– | ரூ.2,31,700/– | ரூ.2,36,650/– |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள அங்காளம்மன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அரியலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**29.05.2019** | **38**

**<u>பொருள் எண். 05</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. i) **செயலாக்க அதிகாரி** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

**ii) ஆய்வு நடத்தும் அதிகாரி** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப்பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், அல்லது துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

**iii) மேல்முறையீட்டு அலுவலர்** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**

இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

**2. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு**

i) மொத்தமாக (Whole sale) சமித்தல்/ வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல்/ பகிர்ந்தளித்தல்

**ii)** வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள் , மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரிநிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

**iii)** மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சிமற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

iv)சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

**4. அட்டவணை II –ல் குறிப்பிட்டபடி அபராத தொகை** கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மேல் முறையீட்டுக்கு உரிமை**

அரியலூர் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள்ஆவர். இந்த துணை விதிகள் அரியலூர் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**6. தண்டனைகள் விபரம்** **அட்டவணை II**

**பிரிவு 306 (28–A) –ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

| | | | |
|---|---|---|---|
| 29.05.2019 | 39 | **<u>பொருள் எண். 07</u>**<br>திடக்கழிவு மேலாண்மை விதிகள்–2016ன் பிரிவு–15–ல் குறிப்பிட்டுள்ளவாறு தயார்செய்யப்பட்ட அரியலூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல் திட்டம், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ந.க.எண்.2288/2019p நாள். 25.03.2019 கடிதத்தில் மாவட்ட அரசு இதழில் வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல் திட்டம் (Solid Waste Management Policy and Action Plan) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 29.05.2019 | 40 | **<u>பொருள் எண். 08</u>**<br>திடக்கழிவு மேலாண்மை விதிகள்–2016ன் பிரிவு–15–ல் குறிப்பிட்டுள்ளவாறு தாயார்செய்யப்பட்ட அரியலூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செய்லதிட்டம், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ந.க.எண்.2288/2019p நாள். 25.03.2019 கடிதத்தில் மாவட்ட அரசு இதழில் வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல் திட்டம் (Solid Waste Management Policy and Action Plan) மாவட்ட அரசு இதழில் வெளியிடுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ. 63,000 /– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 29.05.2019 | 41 | **<u>பொருள் எண். 09</u>**<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு அபராதம் விதிக்கவும் துணை விதிமுறைகளை மாவட்ட அரசு இதழில் வெளியிடுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ. 4,200 /– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 29.05.2019 | 42 | **<u>பொருள் எண். 10</u>**<br>அரியலூர் நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டில் உள்ள குளீரூட்டும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், கணினி சர்வர் பழுது ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதால், அலுவலக நிர்வாக நலன் கருதி நகராட்சிகள் விதி 15ன் கீழ் சரி செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.10,200/–னை JAYASIVAM A/C SERVICE CENTER, ARIYALUR என்ற நிறுவனத்தில் மூலம் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 29.05.2019 | 43 | **<u>பொருள் எண். 11</u>**<br><br>அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.அ4/5029/2018, நாள்.20.02.2019ன்படி அரியலூர் மருத்துவமனை சாலையில் உள்ள அங்கன்வாடி மையம் பெரிய பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 44 | **<u>பொருள் எண். 12</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான கீழப்பழுவூரில் உள்ள அமைந்துள்ள உரக்கிடங்கில் மழை காலங்களில் மழைநீர் தேங்கா வண்ணம் குழாய்கள் பதித்தல் மற்றும் வார்டு எண்.11ல் உள்ள நுண்ணிய கலவை உரக்கிடங்கில் பள்ளமான பகுதிகளில் கிராவல் கொண்டு சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.4,50,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| **29.05.2019** | **45** | **<u>பொருள் எண். 13</u>**<br><br>அரியலூர் நகராட்சி அலுவலகப்பயன்பாட்டில் உள்ள UPS பேட்டரி (12V/84Ah) பழுதடைந்துள்ளதால், புதிதாக மாற்றம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,35,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>**அலுவலகப்பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **29.05.2019** | **46** | <u>பொருள் எண். 14</u><br><br>அரியலூர் நகராட்சியின் 2019–2020ம் ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |